# கிழக்கு பகுதிபடுகொலை சம்பவம்நாடாளுமன்றில் பிரஸ்தாபிக்கப்படும்

(கொழும்பு)

மட்டக்களப்பு கொக்கட்டிச் சோலையில் அண்மையில் நடை பெற்ற 166 தமிழர் படு கொலைச்சம்பவம் குறித்து பாராளுமன்றத்தில் எதிர் வரும் புதன்கிழமையன்றுபிரஸ் தாபிக்கவுள்ளதாக மட்டக் களப்பு பாராளுமன்ற

[4ம் பக்கம் பார்க்க]


விலை ரூபா 4-50

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 33 | ஆனி 1 | துல்ஹஜ் 2 | இதழ் 124

யாழ்ப்பாணம் | சனிக்கிழமை | 15-06-1991


## மன்னாரில் பொதுமக்கள்மீது ராணுவம் துப்பாக்கி சூடு

(மன்னார்)

மன்னாரில் தேங்காய் வாங்கச் சென்ற பொதுமக்கள் இராணுவத்தினரின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகினார்கள்.

கடந்த 11-ஆம் திகதி தாரா

(4-ம் பக்கம் பார்க்க)

## உலர் உணவு விநியோகம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்திலுள்ள இடம்பெயர்ந்த ''இ'' அட்டை உடையவர்களுக்கான 10-ம், 11-ம் கட்ட உலர் உணவுப் பொருள் விநியோகத்தையும் ''அ'' ''உ'' அட்டை உடையவர்களுக்கான 8-ம் கட்ட உலர் உணவுப் பொருள்

(4ம் பக்கம் பார்க்க)

# கொக்கட்டிச்சோலை படுகொலை சம்பவம்:

# விசாரணை மேற்கொள்ளுமாறு இராணுவ தளபதிக்கு உத்தரவு

## பிரதமர் இன்று கிழக்கு விஜயம்

(கொழும்பு)

மட்டக்களப்பு மாவட்டம் கொக்கட்டிச்சோலையில் நடைபெற்ற படுகொலைச் சம்பவம் குறித்து உடனடி விசாரணையை மேற்கொள்ளுமாறு இராணுவ தளபதி மேஜர் ஜெனரல் ஹமில்டன் வணசிங்காவுக்கு ஜனாதிபதி திரு. ஆர். பிரேமதாசா நேற்று உத்தரவுபிறப்பித்தார்.

இதேவேளையில் கொக்கட்டிச்சோலையில் நிலைமைகளை நேரில் கண்டறிவதற்காக புனர்வாழ்வுத்துறை அமைச்சர் நேற்று அங்கு விஜயம் செய்தார். இன்று பிரதமரும், பாதுகாப்பு இராஜாங்க அமைச்சருமான திரு. டி. பி. விஜய துங்கா கொக்கட்டிச்சோலைக்கு விஜயம்செய்யவிருக்கிறார்.

**சுதந்திரமான விசாரணை வேண்டும்**

கொக்கட்டிச் சோலையில் இடம்பெற்ற படுகொலை சம்பவத்தை விசாரணை செய்ய சுதந்திரமானதொரு விசாரணைக் கமிஷனை நியமிக்குமாறு மட்டக்களப்பு எம். பிக்கள் ஜனாதிபதியை கோரியுள்ளனர்.

இராணுவத்தின் கொடூர தாக்குதலில் 166 தமிழர்கள் கொல்லப்பட்டது குறித்து பல அமைப்புகளும் பலத்த கண்டனம் தெரிவித்துள்ளன.

**தற்காலிக பதவிநீக்கம்**

தமிழர் படுகொலைச் சம்பவத்தில் ஈடுபட்டதாகக் கருதப்படும் இராணுவ உயரதிகள் தற்காலிக பதவிநீக்கம் செய்யப்பட்டுள்ளதாக அரசு அறிவித்துள்ளது.

**மருத்துவக்குழு விரைவு**

இச்சம்பவத்தில் படுகாயமடைந்த நூற்றுக்கணக்கான தமிழர்களை காப்பாற்றும் பொருட்டு மருத்துவக்குழு ஒன்று கொழும்பிலிருந்து மட்டக்களப்பிற்குவிரைந்துள்ளது.

இதேவேளை பாடசாலையில் தஞ்சமடைந்திருந்த ஏராள

[4ம் பக்கம் பார்க்க]

## வீரவணக்கம்

பருத்தித்துறை கடற்பகுதியில் கடந்த 9-ம் திகதி ஏற்பட்ட படகுவிபத்தில் 7 வீர வேங்கைகள் வீரமரணத்தை தழுவினார்கள்.

மேஜர் டேவிட் (கிறிஸ்தோபர் அன்ரன் மரியதாஸ்-பொலிகண்டி), லெப். கரிகாலன் (சிதம்பரப்பிள்ளை - சுரேஸ்

[4ம் பக்கம் பார்க்க]

## யாழ். வைத்தியசாலைக்கான மருத்துவ உபகரணங்கள் கொழும்பில் தேக்கம்

[யாழ்ப்பாணம்]

யாழ். போதனா வைத்திய சாலைக்கென ஒதுக்கப்பட்ட 2 பற் சிகிச்சைப் பிரிவுகளுக்கான உபகரணங்கள் கொழும்புத் துறைமுகத்தில் கடந்த 3 மாதங்களாகத் தேங்கிக் கிடப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## வீரமரணமடைந்த போராளிகளின் உயிர் துடிப்பு இந்த விழா! - யோகி.

[யாழ்ப்பாணம்]

''தலைவர்பிரபாகரன் காலத்தில் போராளிகள் உயிர்த்தியாகம் செய்து வளர்த்த தமிழ். அந்தஇன்பத் தமிழ் புத்துயிர் பெறும். வீரத்துக்கு இலக்கணம் வகுக்கும் இந்த மண்ணின்வரலாற்றை மீண்டும் மீண்டும் சொல்வதற்கு தமிழை நாம் வளர்ப்போம்.''

இவ்வாறு விடுதலைப்புலிகளின் மக்கள் முன்னணி செயலாளர் நாயகம், யோகி யாழ். முற்றவெளி மைதானத்தில் பெரும் திரளான மக்கள் மத்தியில் பேசுகையில் குறிப்பிட்டார். விழாவுக்கு விடுதலைப் புலிகளின் மூத்த உறுப்பினர் பேபி சுப்பிரமணியம் தலைமை வகித்தார்.

(4-ம் பக்கம் பார்க்க)

## முற்றவெளியில் மக்கள் வெள்ளம் அலைமோதியது

[யாழ்ப்பாணம்]

யாழ். முற்றவெளி மைதானத்தில் பத்துக்கும் மேற்பட்ட முத்துச்சப்பரங்கள், சத்திரத்துச் சந்தியிலிருந்து மாவீரர் அரங்கு மாத்திரமன்று, மாநகரம் எங்கும் சரிகை மாலைகள், கொடிகள், சோடனைகள் இத்தனை அலங்காரங்களுடன் தமிழீழ விடுதலைப் புலிகளின் திறப்புரையோடு விடுதலைப் புலிகளின் கலை பண்பாட்டுக்கழகத்தினரின் முத்தமிழ்விழா 8ம் நாள் நிகழ்ச்சி முற்றவெளி மைதானத்தில் நேற்று ஆரம்பமாகியது.

பல லட்சம் மக்கள் கலந்து கொண்டவிழாவில் ஒருபக்கம் இயல், இசை, நாடக முத்தமிழ் அரங்கிலே சங்கத்தமிழ் வளர்த்த மூவேந்தரின் கொடி பறப்பது போன்று புலிக்கொடியும் மறுபக்கம் மாவீரர்களும் வீரவேங்கைகளும் வென்றெடுத்த யாழ். கோட்டையில் புலி தேசியக்கொடியும் பறப்பதுகண்டு, தமிழனுக்கு வீரம் மாத்திரமல்ல கலை, பண்பாடு, முக்கியம் என்பதைக் காட்டுகின்றன. (152)

## முத்தமிழ் விழா குணும்சரீதியாக வளர்ச்சி பெற்றவிழா - பாலகுமார்.

[யாழ்ப்பாணம்]

'பலஸ்தீன விடுதலை இயக்கத்தை உலக நாடுகள் அங்கீகரித்தன. இராஜதந்திர அந்தஸ்து வழங்கின. அந்த இயக்கத்துக்கு இன்று ஒருகுழி நிலம் இல்லை. ஆனால் நாங்கள் எமது சொந்தப் பூமியில் நின்று பேசுகிறோம். அந்தளவுக்கு விடுதலைப்புலிகள் வளர்ச்சி அடைந்துள்ளனர்.'

இவ்வாறு விடுதலைப்புலி

(4-ம் பக்கம் பார்க்க)

## இன்றைய முத்தமிழ் விழாவின் முக்கிய நிகழ்ச்சிகள்

(யாழ்ப்பாணம்)

● விடுதலைப்புலிகள் கலை பண்பாட்டுக் கழகத்தினர் நடாத்தும் முத்தமிழ் விழாவின் ஒன்பதாம் நாளான இன்று தமிழீழத்தின் தலைசிறந்த அறிஞர்களும், பேச்சாளர்களும்

[4ம் பக்கம் பார்க்க]

## இன்று தமிழகத்தில்தேர்தல்

(புதுடில்லி)

தமிழ் நாடு உட்பட 7 மாநிலங்களிலும் மற்றும் புதுச்சேரி யூனியன் பிரதேசத்திலும் இன்று வாக்களிப்புநடைபெறவுள்ளது.

பிரதமர் சந்திரசேகர் திரு. மு கருணாநிதி, செல்வி ஜெயலலிதா ஆகியோரின் அர

(4ம் பக்கம் பார்க்க)

## முத்தமிழ் விழா மலர்

[யாழ்ப்பாணம்]

''விடுதலைப் புலிகள் இயக்கத்தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் வாழ்த்துச் செய்தி உட்பட கவிதைகள், கட்டுரைகள், சிறுகதைகள் போன்ற சிறந்த அம்சங்களை உள்ளடக்கி முத்தமிழ்விழா மலர் வெளிவந்திருப்பது பாராட்டுக்குரியதாகும்

இவ்வாறு நேற்று முத்தமிழ்

(4-ம் பக்கம் பார்க்க)

# வரி விளம்பரம்

### தேவை

சவுக்குவிதை தேவை. மில்க்வைற், யாழ்ப்பாணம். (எ-1377)

### விற்பனைக்கு

எம்மிடம் பழைய புதிய சினிமாப்பட வீடியோகசெட்டுகள் விற்பனைக்குண்டு. தி.பரமசிவன்பிள்ளை, மூத்ததம்பி வளவு, கரவெட்டி வடக்கு. (சி-4831)

### ஜாதகக் குறிப்புகள்

வெளிநாட்டில் பிறக்கும் குழந்தைகளுக்கான ஜாதகக் குறிப்புகள் பூமிசாஸ்திரகணித விதிமுறைப்படி கணித்து ஜாதகக் குறிப்புகளை பலன்களுடன் எழுதிக்கொள்வதற்கு T V. பாலா சோதிட நிலையம், சைவமகாஜன மகாவித்தியாலயம் முன்பாக. கே. கே. எஸ். ரேட், இணுவில். சி-4850)

### மணமகள் தேவை

யாழ் இந்து, ஆசிரியர் (வயது 30) படித்த அழகிய தோஷமற்ற மணமகள் தேவை. சைவ போஷனம் விரும்பத்தக்கது. விபரங்களுடன் கடித மூலம் தொடர்பு கொள்க: விளம்பர இல. 4851 C/o ஈழநாடு, யாழ்ப்பாணம் (சி-4851)

### C C C

Apprenticeship in Pharmacy வகுப்பு 26-06-91 சனிக்கிழமை தொடக்கம் C. C. C. கிளினிக்கில் நடைபெறவுள்ளது. கீழ்க்காணும் முகவரியில் தொடர்பு கொள்ளவும். உரிமையாளர், C, C. C. Clinic, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (எ 1382)

### 'முள்முடி மன்னர்கள்'

மீரா வெளியீடு சமூகநாவல் ''ஒற்றைக்காகம் விடாமல் கரைந்து கொண்டிருந்தது'' என்று ஆரம்பித்து ''அடக்குமுறைக்கு எதிராகக் கிளர்ந்தெழுவோம், தமிழ் ஈழத் தாயகத்தின் விடுதலைக்காகப் போராடுவோம்'' என்பது வரை யதார்த்தமாக எழுதியிருக்கிறார் சிதம்பர திருச்செந்திநாதன் விற்பனையாகின்யது. (சி-4842)

### வரவு செலவு திட்டம்

[கொழும்பு]

1992-ம் ஆண்டிற்கான வரவு - செலவுத்திட்டம் எதிர்வரும் நவம்பர் மாதம் 12-ம் திகதி நிதியமைச்சரும் பிரதமருமான டி. பி விஜயதுங்காவினால் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

### சைவசமய பரீட்சை

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையினரால் வருடம் தோறும் அகில இலங்கை ரீதியில் சைவசமயபாடப் பரீட்சை இவ்வாண்டு நவம்பர் 3ம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடாத்தப்படவுள்ளது.

ஆண்டு 3 தொடங்கி ஆண்டு 13 வரையுள்ள மாணவர்கள் மத்தியில் இப் பரீட்சை புடாத்தப்படும்.

### வர்த்தக ஊழியர் விடுமுறை

(புலோலி)

பருத்தித்துறை, புலோலிப் பகுதிகளில் பிரதி ஞாயிறு தோறும் வர்த்தகநிலைய ஊழியர்களுக்கு விடுமுறை வழங்கப்பட்டு வருகிறது. இதே வேளை நெல்லியடிப் பகுதியில் பிரதி வெள்ளிதோறும் வர்த்தக நிலைய ஊழியர்களுக்கு விடுமுறை வழங்கப்படுகிறது. (61)

### வயோதிபர் சடலம்

[பளை]

முகமாலை இந்து மயானத்தில் 65 வயது மதிக்கத்தக்க வயோதிபர் ஒருவரின் சடலம் அழுகிய நிலையில் காணப்பட்டது.

இவ்வயோதிபரை இனங்காண முடியாதநிலையில் முகமாலை சிற்றூர் அவையினர் அந்த இடத்திலேயே சடலத்தை தகனம் செய்தனர்.

---

## அளவெட்டி பெருமாக்கடவைப் பிள்ளையார் கோவில்

## வருடாந்த மகோற்சவம் - 1991

கொடியேற்றம்: 17-6-91 திங்கள் பகல் 12 மணி
இரதோற்சவம்: 25-6-91 செவ்வாய் பகல் 10 மணி
தீர்த்தோற்சவம்: 26-6-91 புதன் பகல் 11 மணி
பூங்காவனம்: 27-6-91 வியாழன் மாலை 4-00 மணி

பரிபாலன சபை
அளவெட்டி பெருமாக்கடவைப் பிள்ளையார் கோவில்

(சி-4837)

---

## நன்றி செலுத்தும் ஆராதனை அழைப்பு

1991 மே 17 அன்று தனது 94ம் வயதில் காலம் சென்ற திருமதி லில்லி ராசம்மா கணபதிப்பிள்ளை அவர்களின் வாழ்க்கைக்கு நன்றி செலுத்தும் ஆராதனை

ஞாயிறு 16-6-1991 பி. ப. 3-30 மணிக்கு

தென் இந்திய திருச்சபை வட்டுக்கோட்டை ஆசன ஆலயத்தில் நடைபெறும். உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்பாய் அழைக்கின்றோம்.

Dr. சந்திரா அம்பலவாணர்
''பிஷப் இல்லம்''
வட்டுக்கோட்டை.

(எ-1380)

---

## CITY CLINICAL CONSULTATION

## Apprenticeship in Pharmacy

கொழும்பு மருத்துவக் கல்லூரிச் சபையினால் நடாத்தப்படும் PHARMACIST வெளிக்களப் பரீட்சைக்குத் தோற்ற விரும்புவோருக்கான பாடநெறி வகுப்பு 22-06-91 சனிக்கிழமை மாலை 2 மணிக்கு ஆரம்பிக்கப்படவுள்ளது.

தகமை: G. C. E. (O/L) பரீட்சையில் ஆங்கிலம், உடனலவியல், பொது விஞ்ஞானம் ஆகிய பாடங்களில் சித்தி.

வைத்தியக் கல்லூரிச் சபையினால் பயிலுனருக்கான பதிவு, பதிவுசெய்யப்பட்ட மருந்தாளரினால் (MASTER PHARMACIST) செய்து கொடுக்கப்படும்.

ஏனைய விபரங்களுக்கு 16-06-91க்கு முன்னதாகக் கீழ்க் காணும் முகவரியுடன் தொடர்புகொள்ளவும்.

Propriter:

**C.C.C. CLINIC**

**514/16, Hospital Road, Jaffna.**

(சி 1381)

---

## கண்ணீர் அஞ்சலி

## டாக்டர் J. P. C. பிலிப்ஸ்

(J. P.)

31-5-1991ல் சென்னையில் காலமான தலைசிறந்த பொதுநலச் சேவையாளன் வைத்தியக் கலாநிதி J. P. C. பிலிப்ஸ் அவர்கள் மறைந்ததையிட்டு ஆழ்ந்த கவலை அடைகின்றோம்.

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கும்

**E. தியாகராசா**
(குடும்பத்தினர்)
43, காரைக்காட்டு வீதி,
வண்ணார்பண்ணை
யாழ்ப்பாணம்.

(சி-4849)

---

## பற்றீஷியன்

## தொழிற் பயிற்சி நிறுவனம்

# Patrician Institutes

## தொழில் நுட்ப பயிற்சி நெறிகள்

### புதிய பிரிவுகள் ஆரம்பம்

1: COMPUTER PROCESSING COURSES

(1) Computer Programming in Basic Language and disk Operating System (MS. DOS)
Duration - 4 Months

(2) Word Processing and MS. DOS (Word Star - 4000)
Duration - 3 Months

Commencing - 19-06-91 Wednesday 3-00 P. M.
Equipment Used - LASER XT/2, XT/3, 386 and Bitcom (IBM Compatibles)
Lecturers - Mr. S. R. Logendra D. C. A. (Systems Analyst)

2. CITY AND GUILDS OF LONDON INSTITUTE
Quantity Surveying (Part - 1) (6 Months)
ஆரம்பம்: 19-06-91 மாலை 4-00 மணி

3. DRAUGHTSMAN SHIP கட்டிடப் படம் வரைதல் (6 மாதம்)
ஆரம்பம்: 20-06-91 மாலை 3-00 மணி

4. SHORT - HAND & TYPING (ENGLISH)
தட்டெழுத்தும் சுருக்கெழுத்தும்

5. ELECTRICAL WIRING - மின்சார இணைப்பு (3 மாதம்)

6. MOTOR MECHANISM - மோட்டார் வாகனம் திருத்துதல் (6 மாதம்)

7. MOTOR WINDING - மோட்டர் வைன்டிங் (4 மாதம்)

8. வெளிநாட்டு வேலைவாய்ப்பு பெறுபவர்களின் நலன்கருதி 'ஜெனரல் எலக்ரீஷியன்'' என்னும் புதிய பயிற்சி நெறி ஆரம்பிக்கப்படுகிறது.
GENERAL ELECTRICIAN - காலம் (4 மாதம்)

இப் பயிற்சி நெறியில் உள்ளடக்கப்பட்டுள்ள பாடத் திட்டங்கள்

| | | |
|---|---|---|
| I | அடிப்படை மின்சாரம் (AC / DC) | Basic Electricity (AC / DC) |
| II | மோட்டர் வைன்டிங் | Moter Winding |
| III | ஆமச்சர் வைன்டிங் | Armature Winding |
| IV | டிரான்ஸ் போமர் வைன்டிங் | Transformer Winding |
| V | கவுஸ் வயரிங் | House Wiring |
| VI | எல்லாவிதமான மின் உபகரணங்களும் பழுது பார்த்தல், இயக்குதல் | Repairing of all type of Electrical Equipments |

**பயிற்சி ஆரம்பம்: 19-06-91 புதன்கிழமை காலை 9-00 மணி**

விண்ணப்பப் படிவங்களை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

மேலதிக விபரங்களுக்கு:

பதிவாளர்
பற்றீஸியன் இன்ஸ்ரிரியூட்ஸ்,
59, சென். பற்றிஸ் வீதி,
யாழ்ப்பாணம்.

REGISTRAR
Patrician Institute of Higher Studies,
59, St. Patrick's Road,
Jaffna.

[எ-1379]

# உலகத் தமிழரின் விழாவாக முத்தமிழ் விழா அமைகிறது!

## - மூர்த்தி

(புலோலி)

''500 ஆண்டுகளுக்கு முன்னர், மன்னர் காலத்தில் தமிழ் அன்னைக்கு விழா எடுத்தது போல, இன்றைய முத்தமிழ் விழா தமிழனின் வீர விழாவாக; உலகத் தமிழரின் விழாவாக; அதுவும் எமது தலைவர் பிரபாகரன் தலைமையில், நாம் வாழுகின்ற நேரத்தில் நடைபெறுவது மகிழ்ச்சிக்கும் சிறப்புக்கும் உரியது.''

இவ்வாறு நெல்லியடி மத்திய மகாவித்தியாலய மாவீரர் அரங்கில் நடைபெற்ற 7ஆம் நாள் முத்தமிழ் விழாவில் திறப்புரையாற்றிய விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி அரசியல் பொறுப்பாளர் திரு. மூர்த்தி கூறினார்

விடுதலைப் புலிகள் வடமராட்சி மக்களுறவுக் கொள்கை முன்னெடுப்புப் பொறுப்பாளர் திரு. அரசண்ணா தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் திரு. மூர்த்தி மேலும் பேசுகையில் கூறியதாவது:

''எமது தமிழ்மொழி மீது சமஸ்கிருதமும், ஆங்கிலமும் ஆக்கிரமித்துள்ளது தமிழ் மொழியை அடக்க, அரசு பல நடவடிக்கைகளை மேற்கொண்டு தமிழை ஒழிக்க முயர்சி செய்துவருகிறது.

''இந்த முத்தமிழ்விழா பொருத்தமான விழா என்பதைத் தமிழ்மக்கள் புரிந்து கொள்ளவேண்டும்.

''தமிழினம் போராட்டம் நடத்தும் இவ்வேளையில் அதன் ஆரம்ப காலத்தில் இளைஞர்கள் ஆயுதம் ஏந்திப் போராடினார்கள். பின்னர் பெண்களும் ஆயுதம் ஏந்திப் போராடிவருகின்றனர். இனிமேல் எமது தாய், தந்தையரும், முதியவர்களும் ஆயுதங்களை ஏந்தினால் எமக்கு விரைவில் விடிவு கிடைத்துவிடும். அப்படியான விடிவு, எமக்கு வெற்றி விழாவாக அமையும்.''

விழாவுக்குத் தலைமைவகித்த திரு.அரசண்ணா தமது தலைமை உரையில் கூறியதாவது; தமிழ் ஈழம் தன்மானத்தை உயர்த்தித் தமிழ்மொழியை மேலெழுப்புமுகமாக இவ்விழாவைக் கொண்டாடுகிறோம்.

தமிழினம் அளப்பரிய உன்னத நிலையை அடைய மக்களின் பங்களிப்பு அவசியமாகும். நல்ல திசை செல்லும் தலைவரை நாம் சந்தித்துள்ளோம். நாம் செல்லும் திசை சரியானது. இறுதிமூச்சு வரை எமது திசை நோக்கி நாம் சென்றுகொண்டிருக்கின்றோம்.

விடுதலைப் போராட்டத்தில் மக்கள் கலந்துகொள்வது வரலாற்று மேன்மையாகும். நாம் விடுதலைப் போராட்டத்தை வளர்த்து உலகத்தில் உன்னதமாக நிலையிருத்தி வாழ்வோம்.

யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர் கலாநிதி சோ. கிருஷ்ணராஜா சிறப்புரை நிகழ்த்தினர். (61)

---

# அ.தி.மு.க. ஆட்சியமைத்தால் நெடுஞ்செழியன் முதல்வர்?

(சென்னை)

தமிழகத்தில் அ. தி. மு. க. வெற்றிபெறும் பட்சத்தில் திரு. நெடுஞ்செழியனையே முதல்வராக்குமாறும், ஜெயலலிதாவின் ஜாதகப்படி அவர் முதல்வரானால் விரைவில் ஆட்சி கலைக்கப்படுமென்றும் பிரபல சோதிடர் ஒருவர் கூறியதாக 'விஜயபாரதம்' என்ற சஞ்சிகை தெரிவித்துள்ளது.

தமிழக தேர்தல் தொடர்பாக இந்த சோதிடரை சந்திக்குமாறு ஜெயலலிதா, அ. தி மு. க. முக்கியபிரமுகர்கள் சிலரை இவரிடம்அனுப்பியிருந்தார்.

இதன்போதே சோதிடர் இதனைக் கூறினாராம். தமிழகத்தில் அ. தி. மு. க-காங்கிரஸ் கூட்டணியேஆட்சியைப் பிடிக்குமென்றும் ஆனால் ஜெயலலிதா முதல்வராகும் பட்சத்தில் விரைவில் ஆட்சி கவிழும் என்றும், நெடுஞ்செழியனை முதல்வராக்கினால் ஆட்சி தொடருமென்றும் சோதிடர் கூறியுள்ளார்.

எனினும் அ. தி மு. க. வெற்றிபெற்றால் ஜெயலலிதாவே முதல்வரென கட்சிப் பிரமுகர்கள் சிலர் தெரிவித்துமுள்ளனராம். (சி)

---

## யாழ். போதனா வைத்தியசாலை பணிபபாளர் கொழும்பு சென்றார்

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் செல்வி புஷ்பா சண்முகம், குமண கப்பலில் கொழும்பு சென்றுள்ளார்.

யாழ். போதனா லைத்தியசாலையில் ஏற்பட்டுள்ள வெற்றிடங்களுக்கான சகல தரத்திலான ஊழியர்களை நியமிப்பதற்கான அனுமதி சம்பந்தமாகவும், சுய விருப்பத்தின் பேரில் சென்ற ஊழியர்களை, அவசர தேவைக்காகத் திரும்பவும் அழைப்பதற்குரிய விண்ணப்பங்கள் தொடர்பாகப் போதனா வைத்தியசாலைகள், சுகாதார அமைச்சு உயர் அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்காகவும் அவர் கொழும்புசென்றுள்ளார். [56]

---

## இராசி பலன்

**15-06-1991**

**சனிக்கிழமை**

திருதியை மு. ப 11-24 வரை. புனர்பூசம் காலை 7-10 வரை பூசம், வைகறை 5-41 வரை, இராகுகாலம்காலை 8-53 முதல் 10-23 வரை, சுபநேரம் பகல் 2-53 முதல் மாலை 4-23 வரை. சதுர்த்தி விரதம்.

மேடம்: பதட்டம், குடும்ப கவலை, உடல் உபாதை.

இடபம்: சுபகாரியசெலவு, இனசன உறவு, வஞ்சனை

மிதுனம்: மறைமுக எதிரி, குடும்பகஷ்டம். நிலைகுலைவு.

கடகம்: தொழில் லாபம். தயாள சிந்தை, பாராட்டு.

சிங்கம்: அடாவடித்தனம், வீண் சிக்கல், மனச்சுமை.

கன்னி: எதிர்பாராத உதவி, பணப்புளக்கம், மன நிறைவு.

துலாம்: ஆசாரம், அதிக மகிழ்ச்சி, காரியவெற்றி.

விருச்சிகம்: தந்தையால் துன்பம், பணநெருக்கடி, குடும்ப பிரிவு.

தனுசு; உடல் உபாதை, வழக்கு வம்பு, மனவேதனை.

மகரம்: ஆலய வழிபாடு, குடும்ப மகிழ்ச்சி, பயணம்.

கும்பம்: மாமனார் நன்மை, தொழில் சிறப்பு, சகோதரர் உதவி.

மீனம்; வாக்குவாதம், புத்திரர் பகை, தொழில் குழப்பம்.

---

# தீவுப்பகுதிமாணவர்களுக்கு பாடசாலை உபகரணங்கள் உதவி

(யாழ்ப்பாணம்)

இராணுவ நடவடிக்கைகளினால் இடம்பெயர்ந்த தீவுப் பகுதிப் பாடசாலை மாணவர்களுக்கு 'அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையம்' பாடசாலை உபரகணங்களையும், சீருடைகளையும் வழங்கிவருகின்றது.

அகதிகளின் புனர் வாழ்வுக் கழகம், அறவழிப் போராட்டக் குழு, அகதிகள் புனர் வாழ்வு நிதியம், மெதடிஸ்ற் திருச்சபை, சர்வோதயம் ஆகிய நிறுவனங்களின் ஆதரவுடன், ஊர்காவற்றுறை துயர்துடைப்புச்சங்கத்தின் வேண்டுகோளின்பேரில் தீவுப்பகுதி மக்களுக்குச் சமையற் பாத்திரங்கள், பாடசாலை உபகரணங்கள் என்பவற்றை மேற்படி நிறுவனம் யாழ். மத்திய கல்லூரியில் வைத்து வழங்கிவருகிறது.

ஒரு லட்சத்து 25 ஆயிரம் ரூபா பெறுமதியான பாடசாலைச் சீருடைகள், ஊர்காவற்றுறைக் கொத்தணி அதிபரின் மேற்பார்வையில் பாடசாலை மாணவர்களுக்கு வழங்கப்படுகின்றன. [வி]

---

# ஆயுதங்களைப் போட்டுவிட்டு அமெரிக்க வீரர்கள் ஓட்டம்

(மணிலா)

பிலிப்பைன்ஸ் தலைநகர் மணிலாவுக்கு அண்மையில் பெரும் எரிமலை வெடித்ததையடுத்து மணிலா 'பிளாட்' விமான நிலையத்தில் நிலைகொண்டிருந்த அமெரிக்கப் படையினர் பெருமளவு ஆயுதங்களை கைவிட்டு தப்பியோட்டம் பிடித்துள்ளனராம்.

அமெரிக்கபடையினர் வழக்கமான பெருமவவு ஆயுதங்களையும், அணுவாயுதங்களையும் கைவிட்டு விட்டே தப்பியோடியுள்ளதாகவும் காலி செய்யுமாறு இவர்கள் எச்சரிக்கப் பட்டிருந்தபோதும் இது பற்றி படையினர் அக்கறைப்படவில்லையாம். செய்தி வெளியிட்டுள்ளது. (சி)

---


விடுதலைப் புலிகள்
கலை, பண்பாட்டுக் கழகத்தினர்
நடாத்தும்

# முத்தமிழ் விழா

## 9-ம் நாள் நிகழ்ச்சிகள்

இடம்: யாழ்ப்பாணம் முற்றவெளியில் அமைந்துள்ள 'மாவீரர் கலையரங்கம்'

நாள்: 15-06-1991 சனிக்கிழமை பிற்பகல் 5-30 மணி

**மங்கள இசை**

நாதஸ்வரம்;
திரு. எம். பி.பாலகிருஷ்ணன்
திரு. ஆர். கேதீஸ்வரன்

தவில்!
திரு. ஏ. பாலசுதந்திரன்
திரு. ரீ. உதயசங்கர்
திரு. பி. முருகதாஸ்

**விடுதலைப்புலிகளின் திறப்புரை**

**சிறப்புரை**

சிவத்தமிழ்ச்செல்வி
பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டி

**மேன்முறையீட்டு வழக்காடு மன்றம்**

முதல்நாள் பட்டிமன்றத் தீர்ப்பை எதிர்த்து வழக்கு

நீதிபதிகள்: வித்துவான் சி. குமாரசாமி
திரு. க. சொக்கலிங்கம் (சொக்கன்)
திரு. க. சிவராமலிங்கம்

1. பாதிப்புற்ற அணி மேன்முறையீடு
2. வென்ற அணி விளக்கம்
3. பட்டிமன்ற நடுவர் தீர்ப்புக்கான விளக்கம்
4. வழக்குத் தொடுப்போர் வாதம்
   தொடுப்போர்: திரு. இ. ஜெயராஜ்
   திரு. சி. சிவலிங்கராஜா
5. எதிர்ப்போர் வாதம்
   எதிர்ப்போர்: கலாநிதி நா. சுப்பிரமணியன்
   திரு. பொன். கணேசமூர்த்தி

**இசைக்கச்சேரி**

திரு. எஸ். பத்மலிங்சம் — பாட்டு
செல்வன் பா. கண்ணன் — வயலின்
திரு. எம். சிதம்பரநாதன் — மிருதங்கம்
செல்வன் கே. கண்ணதாசன் — கடம்

**நாடகம்**

தெல்லிப்பளை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தினர் வழங்கும்
''சகுனியர் மூவர்''


---

## துபாயிலிருந்து கடத்தப்பட்ட

# ஆறு கோடி ரூபா வெள்ளிப் பொருட்கள்

[சென்னை]

இராமநாதபுரம் கடற்கரை பகுதியில் சுமார் 9 ஆயிரம் கிலோ கிராம் நிறையுள்ள வெள்ளிப்பொருட்கள் அனாதரவான நிலையில் கண்டெடுக்கப்பட்டன.

நவீனரக மீன்பிடிப்படகில் மறைத்துக் கொண்டுவரப்பட்ட இப்பொருட்களை சுங்கப்பகுதியினர் கைப்பற்றினர்.

சுமார் 6 கோடி ரூபா பெறுமதியான இவ்வெள்ளிப் பொருட்கள் டுபாயிலிருந்து கடத்தி வரப்பட்டதாக கருதப்படுகிறது. (பூ)

---

# இன்று 24-வது ஆண்டு விழா

(யாழ்ப்பாணம்)

கைதடி நவீல்ட் செவிப்புலனிழந்தோர் பாடசாலை பழைய மாணவர் சங்கத்தின் 24-வது ஆண்டு விழா இன்று சனிக்கிழமை கைதடி நவீல்ட் பாடசாலை மண்டபத்தில் நடைபெறும்.

இவ்விழாவில் விடுதலைப்புலிகளின் பிரமுகர்களும் பிரதம விருந்தினர்களாகவும், சிறப்பு விருந்தினர்களாக யாழ் செஞ்சிலுவைச் சங்கப்பிரதிநிதிகளும் கலந்துகொள்ளவுள்ளனர்.

---

**ஈழம் மீண்டெம் இறைமைக்குள் ஆகும்**

கலையுணர்ச்சி மண்மீட்கும் காளையர் உள்ளத்(து)
அலையுணன் கார்க்கும் அதிர்ச்சிக்(கு) - இலையிணை
ஈழமும் மீண்டெம் இறைமைக்குள் ஆகும், தென்
வேழமும் பின்வாங்கும் வீழ்ந்து.

— நம. சிவப்பிரகாசம்

## கிழக்கு பகுதி

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

உறுப்பினர் பரராஜசிங்கம் ஜோசப் நேற்று பி. பி. சிக்கு அளித்த பேட்டியில் தெரிவித்தார்.

## உலர் உணவு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

விநியோகத்தையும் இம்மாதம் 20-ம் திகதிக்கு முன்பாக விநியோகித்து முடிக்குமாறு நேற்றுக்காலை யாழ். செயலகத்தில் நடைபெற்ற உணவு விநியோகம் சம்பந்தமான கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

[153]

## கண்காட்சி நீடிபபு

[யாழ்ப்பாணம்]

முத்தமிழ் விழாவையொட்டி யாழ். இந்துக் கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் நடாத்தப்படும் ஓவிய சிற்பக் கண்காட்சி பொதுமக்களின் வசதி கருதி நாளை 16-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை வரை நீடிக்கப்பட்டிருக்கிறது.

## இன்றைய முத்தமிழ் விழாவின்

[1ம் பக்கத் தொடர்ச்சி)

கலந்துகொள்ளும் மேன்முறையீட்டு வழக்காடுமன்றம் இடம்பெறவுள்ளது. வித்துவான் சி. குமாரசாமி, திரு. க. சொக்கலிங்கம், திரு க. சிவராமலிங்கம் ஆகியோரை நீதிபதிகளாக கொண்ட இந்த நீதிமன்றில் கம்பன்கழக அமைப்பாளர் இ. ஜெயராஜ், கலாநிதி நா. சுப்பிரமணியன், திரு. சி. சிவலிங்கராஜா, திரு. பொன். கணேசமூர்த்தி, ஆகியோர் வழக்குத் தொடுப்போராகவும், எதிர்ப்போராகவும் வாதிடுகின்றனர். புலவர் ஈழத்துச் சிவானந்தன் மானிப்பாயில் நடைபெற்ற கீழ்மன்றில் தீர்ப்பு வழங்கிய நீதிபதி என்ற ரீதியில் இம்மன்றினுல் விசாரணை செய்யப்படவுள்ளார்.

● ஈழத்தின் பிரபல பாடகரும் சங்கீத பூஷணமுமாகிய திரு. எஸ். பத்மலிங்கம் இன்றைய விழாவில் இசைக்கச்சேரி செய்கின்றார். நீண்டகாலத்திற்குப் பின்னர் பல்லாயிரக்கணக்கான மக்களின் முன்னிலையில் மக்களின் அபிமானத்தைப் பெற்ற பாடகர் பாடுவது ஒரு சிறப்பு நிகழ்ச்சியாக இந்த விழாவில் இடம்பெறுகின்றது.

● தெல்லிப்பளை ப. நோ. கூ. சங்கத்தினர் வழங்கும் 'சகுனியர் மூவர்' என்ற நாடகம் இன்று மேடையேற இருக்கின்றது. பலரின் பாராட்டுதலைப் பெற்ற இந்தநாடகம் தமிழீழத்தின் நாடகத்துறை வளர்ச்சியினை சுட்டிநிற்கும் என்று பேசப்படுகின்றது.

## அறிவித்தல்

### கற்புலத்து மனோன்மணி அம்பாள் ஆலயம்

### நந்தாவில் - கொக்குவில்

மேற்படி ஆலயத்தின் வருடாந்த மகா உற்சவம் 16-06-1991 ல் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 2-ம், 3-ம், 4-ம், 5-ம், 6-ம், 7-ம், 8-ம் திருவிழாக்களும், 24-ம் திகதி சப்பறமும், 25-ம் திகதி தேரும், 26-ம் திகதி தீர்த்தமும், 28-ம் திகதி பூங்காவனத்துடன் முடிவடையும். மேற்படி உபயங்கள் ஆலயத்தின் பிரதம குருக்கள் ஜெயந்திநாத சர்மா அவர்களால் கொடியேற்றி, அதைத்தொடர்ந்து வழமையுடைய உபயகாரர்களின் அபிஷேகங்கள், திருவிழாக்கள் [கொடியேற்றத்துடன்] நடைபெறும்.

குறிப்பு: பூங்காவனத்தைத் தொடர்ந்து அன்று மாலை கோவில்வீதியில் மனோன்மணி இளைஞர் சங்கத்தாரால் விஷேட நிகழ்ச்சிகள் நடாத்தப்படும்.

மேற்படி ஆலய தர்மகர்த்தா சபை

[சி4852]

பண்டிதர்

### ச. சிதம்பரப்பிள்ளை அவர்கள்

பண்டிதமணி நூல்வெளியீட்டுச் சபையினரின்

## அஞ்சலி

அமரத்துவம் எய்திய இலக்கிய கலாநிதி பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்களின் அன்பு மாணவரும், திருநெல்வேலி சைவாசிரிய கலாசாலையின் பழைய மாணவரும், வேலணை சைவப்பிரகாச வித்தியாசாலையின் முன்னைநாள் அதிபரும், பண்டிதமணி நூல் வெளியீட்டுச் சபையின் தலைவருமான

சைவத்தமிழ் அறிஞர் பண்டிதர்

ச. சிதம்பரப்பிள்ளை அவர்கள்

காலமான செய்தி கேட்டுப் பண்டிதமணி நூல் வெளியீட்டுச் சபையினர் பெரிதும் கவலைகொண்டுள்ளனர்.

பண்டிதர் ச. சிதம்பரப்பிள்ளை அவர்களது குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அன்னவரின் ஆன்மா சாந்தியுறும் வண்ணம் இறைவன் திருவடிகளை மனதில் இருத்திப் பிரார்த்திப்போமாக.

தகவல்:
அ. பஞ்சாட்சரம்
காரியதரிசி,
பண்டிதமணி நூல்வெளியீட்டுச்சபை
உரும்பிராய், (சி-4857)

இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1991-ம் ஆண்டு ஜூன் மாதம் 15ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Registered as a News Paper at the General Post office Sri Lanka under Licence Number B/100306/81

## மன்னாரில்

[1ம் பக்கத் தொடர்ச்சி]

புரம்பகுதிக்குச் சென்றவர்கள் மீது நடத்தப்பட்ட இத்தாக்குதலில் மிக்கில் (பட்டிதோட்டம்) என்பவர் மரணமானார் மங்கம்மா (நெல்லுக்குளம்) என்பவர் படுகாயமடைந்துள்ளார். [க]

## மூத்தமிழ் விழா

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

விழாவில், மலர் வெளியீட்டையொட்டிச் சிறப்புரையாற்றிய புலவர் ஈழத்துச் சிவானந்தன் கூறினார். (வி)

## கொக்கட்டிச்சோலை

[1-ம் பக்கத் தொடர்ச்சி)

மான தமிழர்கள் வெளியே இழுத்து வரப்பட்டு சுட்டுக் கொல்லப்பட்டனர் என்றும் செய்திகள் தெரிவிக்கின்றன.

300க்கும் மேற்பட்ட தமிழர்கள் படுகாயமடைந்துள்ளனரென்றும் 1,500 இற்கும் மேற்பட்ட தமிழர்கள் அயல் கிராமங்களில் தஞ்சமடைந்துள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

### ஆசிரியைகள் மீது பலவந்தம்

கொக்கட்டிச்சோலைப் பகுதியிலுள்ள ஒரு தமிழ் பாடசாலையில் கல்வி கற்பிக்கும் 6 தமிழ் ஆசிரியைகளும், மற்றும் வேறு தமிழ் பெண்களும் இராணுவத்தினரால் பாலியல் வன்முறைக்கு உட்படுத்தப்பட்டதாக மருத்துவ அறிக்கைள் குறிப்பிடுவதாக ஏ. எவ். பி. செய்தி ஸ்தாபனம் தெரிவித்துள்ளது.

இராணுவத்தால் துப்பாக்கியால் சுடப்பட்டும், எரிக்கப்பட்ட நிலையிலும் குற்றுயிராக பாதி கருகிய நிலையில் காணப்படும் சிறு குழந்தைகள் தண்ணீர் தண்ணீர் எனக் கதறுவது பார்க்கவே பரிதாபகரமாக உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

### 185 தமிழர் கொலை

இச்சம்பவத்தில் 185 தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டதாக ஏஜென்ஸிச் செய்திகள் தெரிவித்துள்ளன. பலர் உயிருடன் எரிக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

## வீரவணக்கம்

[1-ம் பக்கத்தொடர்ர்ச்சி]

வரணி), லெப் ரமணன் (பாண்டியன் - சுந்தரதாஸ் - திருமலை) 2வது லெப். ரவி [சபாபதி - தயாபரன், மட்டக்களப்பு), 2 வது லெப் மாணிக்கம் (சண்முகநாதன் கஜேந்திரன், வட்டுக்கோட்டை], 2-வது லெப். சோபின் [சதாசிவம் - நடராசா - மட்டக்களப்பு) புலவர் [சிறி - ஆனந்தகுரு சியாமணன் - வல்வெட்டித்துறை] ஆகியோரே வீரமரணமடைந்தவர்களாவர்.

விடுதலைப்புலிகள் இவர்களுக்குத் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கின்றனர். (க)

## இன்று தமிழகத்தில்

[1ம் பக்கத் தொடர்ச்சி)

சியல்எதிர்காலம் இன்றைய வாக்களிப்பில் தீர்மானிக்கப்படும்.

## முத்தமிழ்

(1ம் பக்கத் தொடச்சி)

களின் முக்கிய பிரமுகர் திரு. வே. பாலகுமார் யாழ். முற்றவெளி மைதானத்தில் நடந்த முத்தமிழ் விழாவில் பேசுகையில் குறிப்பிட்டார்.

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது: இந்த முற்றவெளி மைதானத்தில் எத்தனையோ வகையான விழாக்கள் முன்பு நடைபெற்றிருக்கின்றன. ஆனல் இந்த முத்தமிழ் விழா அப்படியானதல்ல. இது குணும்சரீதியாக வளர்ச்சிபெற்ற விழா. மக்களை ஏமாற்றலாம் என்றநிலை போய், நடாத்தப்பட்டகாலங்கள் போய், மனிதத் துடிப்போடு, பாரம்பரியக் கலைகள், பரிணமிக்க நடக்கும் விழாவாக அமையப்பெற்றுள்ளது. (152)

## வீரமரணமடைந்த

(1ம் பக்கத் தொடர்ச்சி)

அவர் மேலும் பேசுகையில்: மின்சாரம், எரிபொருள், போக்குவரத்து இல்லாத இந்த நெருக்கடி நேரத்தில் இவ்விழா நடைபெறுகின்றது. இந்த விழா சிங்கள இராணுவத்துடன் போராடி வீரமரணமடைந்த போராளிகளின் உயிர்த்துடிப்பு. நாம் கடந்து வந்த வளர்ச்சியை உரைத்துப் பார்க்கிற உரைகல். வீரம், பண்பாடு, ஆகியவற்றை பதிய வைக்கும் பதிவேடு ஆகும்.

பண்டையதமிழர்கள் காதல் வாழ்க்கையை அறம் என்றும் வீரவாழ்க்கையை புறம் என்றும் வகுத்துள்ளார்கள். எட்டுத்தொகை, பத்துப்பாட்டு ஆகிய பண்டைய இலக்கியங்கள் இப்போதும் நிலைத்து நிற்கின்றன. [152]

## திகதி நீடிப்பு

[கொழும்பு]

ஆங்கில உதவி ஆசிரியர்களைத் தேர்ந்தெடுப்பதற்கான விண்ணப்ப முடிவு திகதி இம்மாதம் 21-ம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளதாக கல்விச் சேவைகள் ஆணைக்குழு அறிவித்துள்ளது-

நேற்று 14-ம் திகதியுடன் விண்ணப்பங்கள் அனுப்பப்பட வேண்டும் என்று அரசாங்கம் ஏற்கனவே அறிவித்திருந்தது தெரிந்ததே. [க]

## மரண அறிவித்தல்

### சரவணமுத்து கணபதிப்பிள்ளை

(அரச மரக்கூட்டுத்தாபனம்)

நெடுந்தீவை பிறப்பிடமாகக்கொண்ட சரவணமுத்து கணபதிப்பிள்ளை நேற்றுமுன்தினம் காலமாகிவிட்டார். இவர் காலம் சென்றவர்களான சரவணமுத்து வள்ளியம்மையின் அன்புமகனும் தெய்வானையின் கணவரும் சுப்பிரமணியம், காலஞ்சென்ற பொன்னம்மா, காலஞ்சென்ற நாகரத்தினம், தியாகராசா, தனலட்சுமியின் சகோதரரும், மதிவதனநாயகி, பொன்னுத்துரை, அருந்ததி அருந்தவநாதன், சுந்தரலிங்கம், மணிவண்ணன், மாலா வெள்ளைத்தம்பி நவராணியின் அன்புத்தகப்பனுரும் ஆவார். இன்று 15-06-91 (சனிக்கிழமை) பிற்பகல் 4 00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் இறுதிக்கிரியைகள்நடை பெற்றுமல்லாவியிலுள்ளமயானத்தில்பூதவுடல் தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்ருர், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

(சி-4856) தகவல்: சர.சுப்பிரமணியம்

### சரவணமுத்து சிதம்பரப்பிள்ளை

(முன்னுள் அதிபர் யா/வேலணை சைவப்பிரகாச வித்தியாசாலை)

வேலணை மேற்கைச் சேர்ந்த பண்டிதர் சரவணமுத்து சிதம்பரப்பிள்ளை அவர்கள் 13-06-1991ல் காலமானுர். அன்னுர் சரவணமுத்து சின்னம்மா தம்பதிகளின் மூத்த புதல்வரும், திரு. ச. பழனிநாதன் [வர்த்தகர், - டிக்கோயா], திருமதி சுந்தரம்பிள்ளை ஞானேஸ்வரி ஆகியோரின் சகோதரரும், திருமதி ப. சௌபாக்கியலெட்சுமி, திரு.ச சுந்தரம்பிள்ளை ஆகியோரின் மைத்துனரும், திரு.ப.ஆரூரன் [ஆசிரியர், வேலணை சேர் வை. து. ம. ம. வி.], திருமதி சச்சிதானந்தம் சிவசாம்பவி, சேந்தன், சிவதீர்த்தன் [ஜேர்மனி], சிவசரவணன் ஆகியோரின் பெரிய தந்தையும், திரு. கலாதரன் [அதிபர் யா/வேலணை, சைவப்பிரகாச வித்தியாசாலை], திரு. சிவகணேசன் (விரிவுரையாளர் - அமெரிக்கா), திருமதி இளமுருகன் சிவநிதி ஆகியோரின் மாமனுமாவார். ஈமக்கிரியைகள் இன்று பி. பகல் 3 மணிக்கு கொழும்புத்துறை துண்டி மயானத்தில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்ருர், உறவினர்கள், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

தகவல்: ப. ஆரூரன்

71/2, புங்கங்குளம் வீதி,
நவநீதன் ஒழுங்கை,
கொழும்புத்துறை,
யாழ்ப்பாணம். (சி-4848)

### திருமதி கந்தையா செல்லாச்சி

வேலணை வடக்கு சோளாவத்தையைச் சேர்ந்த திருமதி கந்தையா செல்லாச்சி அவர்கள் 14-06-1991 வெள்ளிக்கிழமை சிவபதமடைந்துவிட்டார். அன்னுர் காலஞ்சென்ற அம்பலாங்கொடை வர்த்தகர் நீ. க. கந்தையா அவர்களின் துணைவியாரும், குழந்தைவேலு [அம்பலாங்கொடை வர்த்தகர்], நடராஜா [ஓய்வு பெற்ற அரச உத்தியோகத்தர்] ஆகியோரின் அன்புத்தாயாரும், திருமதிகள் பூம்பாவை, கமலாம்பிகை ஆகியோரின் மாமியாரும், சரவணநாதன், திருமதி சரோஜா சிவானந்தன், ஜெகநாதன், வனஜா, சிவநாதன், இரவீந்திரன், மதீந்திரன், புவீந்திரன், குகேந்திரன், இந்திரகலா, திருமதி பாலசொருபி சரவணநாதன், சிவானந்தன் ஆகியோரின் பேர்த்தியும், கஜன், அஜாமினன், ஜனுதனன் ஆகியோரின் பூட்டியும், காலஞ்சென்றவர்களான திருமதி பாக்கியலெட்சுமி நாகநாதர், சுப்பிரமணியம், வேலுப்பிள்ளை ஆகியோரின் சகோதரியுமாவார்.

அன்னுரின் ஈமச்சடங்குகள் யாழ்ப்பாணம், வண்ணுர்பண்ணை, அரசடி வீதி, 47-ம் இலக்கத்திலுள்ள அன்னுரது பேரன் சரவணநாதனின் இல்லத்தில் [15-06-1991] இன்று சனிக்கிழமை நடைபெற்று பகல் 3.00 மணியளவில் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்ருர், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டுகிறோம்.

47, அரசடி வீதி,
வண்ணுர்பண்ணை,
தட்டாதெருச் சந்தி,
யாழ்ப்பாணம்.

க. குழந்தைவேலு
[மகன்]

(சி-4855]